RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 300 | அக்டோபர்.31 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பசும்பொன்னில் தேவர் திருமகனார் பெயரில் ரூ.3 கோடியில் திருமண மண்டபம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

பசும்பொன், அக்.31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின்பு, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:



நம்முடைய நாட்டின் விடுதலைக்காக தன்னையே ஒப்படைத்துக் கொண்டு உழைத்திருக்கும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் நினைவிடத்தில் இன்றைக்கு எங்களுடைய மரியாதையை செலுத்தியிருக்கிறோம்!

பசும்பொன் திருமகனாரின் புகழைப் பற்றி சொல்லவேண்டும் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருமையோடு எடுத்துச்சொன்னதை நான் இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

"அன்றைய அறம் வளர்த்த பாண்டிய மன்னர்களின் ஒருமித்த இளவல் மாதிரி, கம்பீரமாகக் காட்சி அளித்தார் தேவர் திருமகன்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், பசும்பொன் திருமகனாரை மனதார பாராட்டி இருக்கிறார்!

1963ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் அவர்கள் நிறைவெய்திய போது, பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்று கழகத்தில் இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். அவர்களும், இந்தப் பசும்பொன்னுக்கு வந்து அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஏராளமான அரசியல் தலைவர்களும், பொதுமக்களும் வந்து, பசும்பொன் திருமகனாரின் நினைவைப் போற்றும் இந்த நினைவிடத்தை, 1969ல் பார்வையிட்டு, 1974ல் மணிமண்டபமாக உருவாக்கிக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

பாம்பன் பாலத்தை கட்டிய நிலகண்டன் அவர்கள்தான் இதையும் கட்டியிருக்கிறார்.

அதே போல், பி.கே.மூக்கையாத்தேவர் அவர்களின் முயற்சியால் அமைக்கப்பட்டு, மதுரையில் கம்பீரமாக நிற்கும் தேவர் சிலை திறப்பு விழாவுக்கு அன்றைக்கு குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அந்த விழாவிற்குத் தலைமை வகித்தவரும் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

பசும்பொன் திருமகனாரின் நினைவைப் போற்றக்கூடிய, புகழைச் சொல்லக்கூடிய வகையில், தலைவர் கலைஞர் அவர்கள் செய்த முன்னெடுப்புகளைத் தலைப்புச் செய்திகளாக சிலவற்றை மட்டும் நான் இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மதுரை ஆண்டாள்புரம் பாலத்திற்கு முத்துராமலிங்கத் தேவர் பாலம் என்று பெயர் சூட்டினார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் தேவர் பெயரால் 25 இலட்சம் மதிப்பிலான அறக்கட்டளை உருவாக்கினார்.

2007ஆம் ஆண்டு பசும்பொன் திருமகனார் நூற்றாண்டு விழாவை, மாபெரும் அரசு விழாவாக கொண்டாடினார்.

பசும்பொன் திருமகனார் நினைவகத்தில் அணையா விளக்கு அமைத்தது,

தேவர் இல்லத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்தது,

9 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூற்றாண்டு விழா வளைவு அமைத்தது,

9 இலட்சம் ரூபாய் மதிப்பில் புகைப்படக் கண்காட்சி,

4 இலட்சம் ரூபாய் மதிப்பில் நூலகம்,

5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடி இறக்கும் இடம்,

5 இலட்சம் ரூபாய் மதிப்பில் பால்குட மண்டபம்,

5 இலட்சம் ரூபாய் மதிப்பில் முளைப்பாரி மண்டபம்

நினைவகத்தை சுற்றியிருக்கின்ற சாலையை கல் சாலையாக்கியது தலைவர் கலைஞர் அவர்கள். இப்படி நிறைய செய்து பெருமைப்படுத்தியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, பசும்பொன் திருமகனாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பசும்பொன் கிராமத்திற்கு மட்டும், மொத்தமாக 2 கோடியே 5 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகளைச் செய்து கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

1989ல் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று புது இடஒதுக்கீடு உரிமையை உருவாக்கி, கல்வி வேலைவாய்ப்பில் இந்தச் சமூக மக்கள் முன்னேற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர்தான்!

கழக ஆட்சி முதன்முதலாக உருவானபோது, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரமுகர்கள், தங்களுடைய மக்களுக்கான கல்வி மேம்பாட்டிற்காக கல்லூரிகளைத் தொடங்க திட்டமிட்டார்கள். அவை அனைத்திற்கும் அனுமதி வழங்கியவர் தலைவர் கலைஞர்!

அதிலும் குறிப்பாக, முக்குலத்தோர் சமூகம், தாங்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் கல்லூரிகளை அமைக்கத் திட்டமிட்டார்கள். முன்னாள் பேரவைத் தலைவர் செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் 'தேவர் கல்விச் சங்கம்' உருவாக்கப்பட்டது. அதன் சார்பில், மேலநீலிதநல்லூரில், அமைந்த பசும்பொன் தேவர் கல்லூரிக்கு அனுமதி வழங்கியதோடு, 44.94 ஏக்கர் நிலத்தையும் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்தக் கல்வி நிறுவனம், என்ன நோக்கத்திற்காக தொடங்கப்பட்டதோ, அதைச் சீர்குலைக்கின்ற வகையில் சில தனிநபர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு பல பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த வட்டாரத்து மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டு வந்தார்கள்.

அப்போது, "ஆட்சி அமைந்ததும் தீர்வு காண்போம்" என்று நான் சொன்னேன். 2021ல் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும், அதை மீட்டிருக்கின்றோம். இப்போது, அரசு மேற்பார்வையில் அந்தக் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

இன்னும் சிறப்பாக நடத்த நிர்வாக ரீதியாக எல்லா உதவிகளையும் நமது திராவிட மாடல் அரசு நிச்சயமாக உதவி செய்யும் என்று அந்த நல்ல செய்தியையும் நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில், வெயில் மற்றும் மழையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கவும், பசும்பொன் திருமகனார் நினைவிடத்தில், 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள "தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை கடந்த ஆண்டு நான்தான் திறந்து வைத்தேன்.

புதிதாக பசும்பொன்னில் ஒரு திருமண மண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. அந்த கோரிக்கையை உடனடியாக ஏற்று 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேவர் திருமகனார் பெயரில் திருமண மண்டபம் அமைக்கப்படும் என்று இந்த நேரத்தில் நான் உறுதி அளிக்கிறேன்!

பசும்பொன் திருமகனாரைப் பற்றி தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிடும்போது, "வீரராகப் பிறந்தார், வீரராக வாழ்ந்தார், வீரராக மறைந்தார், மறைவுக்குப் பிறகும் வீரராக போற்றப்படுகிறார்" என்று சொல்வார். அத்தகைய பசும்பொன்னாரைப் போற்றுவோம்!

கேள்வி ஸ்ரீ கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தேவர் கல்லூரியில் நிருவாகக் குழு அமைப்பது குறித்துஞ்

முதலமைச்சர் அவர்களின் பதில் நடவடிக்கையில் இருக்கிறது. விரைவில் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவோம்.

கேள்வி ஸ்ரீ தேவர் திருமகனாருக்கு பாரத ரத்னா விருது வழங்குவது குறித்து அதிமுக வலியுறுத்தியுள்ளது தொடர்பாகஞ்

முதலமைச்சர் அவர்களின் பதில் அதை நாங்கள் வழிமொழிய காத்துக்கொண்டிருக்கிறோம்.

கேள்வி ஸ்ரீ காவேரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் குறித்துஞ்

முதலமைச்சர் அவர்களின் பதில் முயற்சியில் ஈடுபடுவோம் என்று சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

கேள்வி ஸ்ரீ தொலைக்காட்சி செய்தியாளர்களுக்கு பென்சன் வழங்குவது தொடர்பாகஞ்

முதலமைச்சர் அவர்களின் பதில் இது உங்களுக்கு மட்டும் அல்ல. தமிழ்நாடு முழுவதும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிறது.



# ஆந்திராவை புரட்டிப் போட்ட மோந்தா புயல்: ஹெலிகாப்டரில் ஆய்வு செய்த முதல்வர் சந்திரபாபு நாயுடு

அமராவதி, அக்.31-

மோந்தா புயல் ஆந்திராவை புரட்டி போட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஹெலிகாப்டரில் சென்று ஆய்வு செய்தார். வங்க கடலில் மையம் கொண்டிருந்த மோந்தா புயல் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு காக்கிநாடா மசூலிப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

அப்போது சுமார் 100 முதல் 110 கி.மீ வேகத்தில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. கோனசீமா, விசாகப்பட்டினம், விஜயநகரம், அம்பேத்கார், ஸ்ரீகாகுளம், பிரகாசம், கிருஷ்ணா, நெல்லூர், கோதாவரி மாவட்டங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் காரணமாக பல வீடுகள் நாசமடைந்தன. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல கிராமங்கள் தண்ணீரால் சூழப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் பல கிராமங்கள், நகரங்கள் இருளில் மூழ்கின. கோனசீமா மாவட்டத்தில் மரம் விழுந்ததில் 2 பெண்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. பல ஆயிரம் ஏக்கர் நெல், பருத்தி, மிளகாய், வாழை, பப்பாளி, தென்னை மரங்கள் அழிந்தன. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உயிர் சேதத்தை விட அதிகமாக பொருட் சேதத்தை இந்த மோந்தா புயல் ஏற்படுத்தி விட்டது. ஆந்திராவில் மோந்தா புயலால் 249 மண்டலங்கள், 48 நகராட்சிகள், 18 லட்சம் பேர் பாதிக்கப்பட்டதாக ஆந்திர அரசு, மத்திய அரசிடம் தெரியப்படுத்தி உள்ளது. இந்நிலையில் நேற்று, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அமராவதியில் காணொலி மூலம் புயல் பாதிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசும்போது, ''புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், எம்.எல்.ஏக்கள், எம்பிக்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். எங்கள் அரசு உங்களுக்கு தேவையான அனைத்தையும் செய்து தரும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு வருமாறு எடுத்துரைக்க வேண்டும்.

ரூ.1000 நிதியுதவி: வீடு, வாசல் இழந்த மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும். அரசு தரப்பில் அவர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்க வேண்டும். முகாம்களில் தங்கி உள்ள ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,000 வீதம் நிதி உதவி வழங்கி, அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அதிகபட்சமாக குடும்பத்துக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் வழங்குங்கள். புயல் வருவதை நாம் தடுக்க முடியாது. ஆனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் நாம் அதன் பாதிப்பை குறைத்து கொள்ள முடியும். தற்போது மோந்தா புயலால் 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். ஆனால், பொருட் சேதம் மிக அதிகமாக உள்ளது.

கடைநிலை ஊழியர் முதற்கொண்டு முதல்வர் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட்டதன் விளைவாக மோந்தா புயலை சிறப்பாக எதிர்கொண்டோம்'' என்றார். அதன் பின்னர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, பாபட்லா, பல்நாடு, கிருஷ்ணா, ஏலூரு, டாக்டர் பிஆர் அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

# நவம்பர் 5ம் தேதி தவெக சிறப்பு பொதுக்குழு: சுற்றுப்பயணத்தை மீண்டும் தொடங்க விஜய் திட்டம்

சென்னை, அக்.31-

தமிழக அரசு வழிகாட்டுதல்களை அறிவித்த பின்னர் விஜய்யின் சுற்றுப்பயணத்தை தொடங்கவும், அதற்கு முன்பு நவ. 5ம் தேதி சிறப்பு பொதுக் குழுக் கூட்டம் நடத்தவும் தவெக நிர்வாகக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. கரூர் துயரச் சம்பவத்தால் முடங்கிய நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தற்போது மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது. உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களை கடந்த 27ம் தேதி மாமல்லபுரத்தில் சந்தித்து ஆறுதல் கூறிய விஜய், அடுத்தகட்ட அரசியல் நகர்வுகளை தீவிரப்படுத்தியுள்ளார்.



இந்நிலையில், கட்சியின் தினசரிப் பணிகளை ஒருங்கிணைக்க 28 பேர் கொண்ட புதிய நிர்வாகக் குழுவை தவெக தலைவர் விஜய் நியமித்துள்ளார். நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னையை அடுத்த பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. பொதுச் செயலாளர் என். ஆனந்த் தலைமை வகித்தார்.

தேர்தல் பிரச்சார மேலாண்மைப் பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில், கரூர் சம்பவம் குறித்த விசாரணை, சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடத்துவது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும், தமிழக அரசு வழிகாட்டுதல்களை வெளியிட்ட பின்னர் விஜய்யின் சுற்றுப் பயணத்தை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது.

விஜய் அறிக்கை... இந்நிலையில், தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் படைக்கலன்களாக நீங்கள் இருக்கையில், நம்மைக் காக்கும் கவசமாக மக்கள் இருக்கையில், அவர்களுடன் நமக்குள்ள உறவையும், அவர்களின் குரலாகத் தொடரும் நம் வெற்றிப் பயணத்தையும் எவராலும் தடுக்க இயலாது. சூழ்ச்சிகளாலும், சூதுகளாலும் நம்மை வென்றுவிடலாம் என்று கனவு காணும் எதிரிகளும் இதை உணர்ந்தே உள்ளனர்.

நமது அடுத்த அடியை இன்னும் நிதானமாகவும், தீர்க்கமாகவும் நாம் எடுத்து வைக்க வேண்டும். இத்தகைய சூழலில் கட்சியின் அடுத்தகட்ட செயல்பாடுகள் குறித்து விவாதிக்க வேண்டும். இவை குறித்து முடிவுகள் எடுக்கும் பொருட்டு பொதுக்குழுவின் சிறப்புக் கூட்டத்தை கூட்ட முடிவு செய்துள்ளோம்.

அதன்படி, தவெக சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் மாமல்லபுரத்தில் நவம்பர் 5ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. வாருங்கள் சிறப்புப் பொதுக்குழுவில் கூடுவோம். வருங்காலம் நமதென்று காட்ட தீர்க்கமாகத் திட்டமிடுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 1,429 சுகாதார ஆய்வாளர்கள் விரைவில் நியமனம்

சென்னை, அக்.31-

விரைவில் நியமிக்கப்பட உள்ள 1,429 சுகாதார ஆய்வாளர்கள் (கிரேடு2) பணிக்கு நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




இதுதொடர்பாக தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியின் கீழ் வரும் சுகாதார ஆய்வாளர் (கிரேடு2) பதவியில் 1,429 காலி இடங்கள் நேரடி நியமன முறையில் நிரப்பப்பட உள்ளன. இதற்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த பதவிக்கு ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர் உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுடன் பிளஸ் 2 முடித்து, அதோடு தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரால் வழங்கப்பட்ட 2 ஆண்டு கால பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் சான்றிதழ் அல்லது சுகாதார ஆய்வாளர் சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழை ஒரு பாடமாக எடுத்து படித்திருக்க வேண்டியது அவசியம்.

பொதுப் பிரிவினர் உள்ளிட்ட அனைத்து வகுப்பினருக்கும் வயது வரம்பு கட்டுப்பாடு ஏதும் கிடையாது. கட்டாய தமிழ் மொழி தகுதித் தாள் தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியம்.

கரோனா காலகட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு, பணிக் காலத்துக்கு ஏற்ப 2 முதல் 5 சிறப்பு மதிப்பெண் வழங்கப்படும். எனவே, தகுதி உள்ள ஆண்கள் www.mrb.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக நவம்பர் 16ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். போட்டித் தேர்வு நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.



# தாம்பரத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 50வது வார்டு மக்களுக்கான சிறப்புக் கூட்டம்

தாம்பரம், அக்.31-


செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 50வது வார்டு மக்களுக்கான சிறப்புக் கூட்டம் மாமன்ற உறுப்பினரும், மமக மாநில துணைப் பொதுச்செயலாளருமான தாம்பரம் யாக்கூப் தலைமையில் சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மமக நிர்வாகிகள் திராவிட கழக மாவட்ட தலைவர் முத்தையன் மற்றும் 50வது வார்டு பகுதியில் உள்ள மக்கள் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்களது பகுதியில் தாம்பரத்தில் பள்ளி, கல்லூரிகள் அதிகமாக உள்ளதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உடல், மனம் ஆரோயக்கியத்துடன் வாழ விளையாட்டு திடல், உடற்பயிற்ச்சி கூடம், நூலகம் உள்ளிட்டவை அமைக்க வேண்டும் எனவும் நாய்களை பிடித்து தடுப்பூசி மற்றும் கருத்தடைக்காக பிடித்து சென்று அதனை மீண்டும் அதே இடத்தில் வெவ்வேறு பகுதி நாய்களை விடுகின்றனர் எனவும் கால்வாய் வசதி, தெரு விளக்கு உள்ளிட்டவைகளை பராமரித்து சீர்செய்ய வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்,

மேலும் எங்கள் பகுதி மாமன்ற உறுப்பினரிடம் நியாயமான கோரிக்கைகளை முறையிட்டால் உடனடி நடவடிக்கை எடுத்து நிவர்த்தி செய்வதாகவும் அவருக்கு எங்களது நன்றியை தெரிவிப்பதாக கூறினர். கூட்டத்தில் ஆண்கள், பெண்கள் என ஏராளமனோர் கலந்து கொண்டனர்



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்தில் உள்ள மண்டல அலுவலகத்தில் மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் மற்றும் புதியதாக பதவியேற்று உள்ள உதவி பொறியாளர் தொழில்நுட்ப உதவியாளர் ஆகியவர்களை அறிமுகப்படுத்தியும் 4வது மண்டலத்திற்கு உட்பட்ட வார்டில் நடைபெற்ற வார்டு கிராமசபை கூட்டம் சிறப்பாக நடத்தி முடித்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி நன்றி தெரிவித்தனர் இந்த மாமன்ற கூட்டம் 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது உடன் 4வது மண்டலத்திற்கு உட்பட்ட அரசு அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



■ தென்காசி மாவட்டம் புளியங்குடி புதிய சார்பதிவாளர் அலுவலகத்தை தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார் அதன் ஒரு பகுதியாக நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சார் பதிவாளர் அலுவலகத்தையும் திறந்து வைத்தார் .இந்த நிகழ்வில் மாவட்ட பதிவாளர் மீரா முகைதீன் புளியங்குடி சார்பதிவாளர் மு. லட்சுமி காந்தன் துணை சார் பதிவாளர் செல்வி லட்சுமி மாவட்ட பதிவாளர் பொறியாளர் ராமகிருஷ்ணன் ஐபி கேமரா ஆனந்தன் பத்திரப்பதிவு எழுத்தாளர்கள் வைகுண்ட மணி ஜவகர் ரகுமான் போன்றோர் கலந்து கொண்டனர்.

# பழனியில் தவெக சார்பில் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

திண்டுக்கல், அக்.31-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் பகுதியில் உள்ள முத்துராமலிங்கத் தேவரின் சிலைக்கு தேவரின் 118 வது குருபூஜை விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டன.



தொடர்ந்து நகரின் முக்கிய வீதி வழியாக தமிழக வெற்றிக் கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் தலைமையில் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக கட்சி நிர்வாகிகள் வருகை தந்து தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

மேலும் இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா மாவட்ட துணைச் செயலாளர் சிவா நகர செயலாளர் மிதுன் மாவட்டத் துணைச் செயலாளர் நாகராஜ் மற்றும் 50க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் திரளாக வருகை தந்து தேவரின் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து தவெக கட்சியின் புகழ் பாடும் விதமாக கட்சி நிர்வாகிகள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு விழாவில் கலந்து கொண்டனர்

**சிவகங்கை மாவட்டத்தில் வங்கிகளில் உள்ள உரிமை கோரப்படாத வைப்பு தொகை தீர்வு குறித்த விழிப்புணர்வு முகாமானது,**

# மூன்றாவது காலாண்டு மாவட்ட அளவிலான வங்கியாளர் குழு கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தொடங்கி வைக்கப்பட்டது

சிவகங்கை, அக்.31-

சிவகங்கை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி ஆகியவைகளின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர் குழு கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் சிவகங்கை மாவட்ட வங்கிகளில் உள்ள உரிமை கோரப்படாத வைப்பு தொகை (Unclaimed Deposit) தீர்வு குறித்த விழிப்புணர்வு முகாமினை தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,



சிவகங்கை மாவட்ட வங்கிகளில் உள்ள உரிமை கோரப்படாத வைப்பு தொகை (Unclaimed Deposit) தீர்வு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்திடும் வகையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, "உங்கள் பணம் - உங்கள் உரிமை" (Your Money, Your Rights) என்ற தலைப்பில் பொதுமக்களிடையே சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடுவதற்கு ஏதுவாக, விழிப்புணர்வு முகாமானது, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி ஆகியவைகளின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மூன்றாவது காலாண்டு வங்கியாளர் குழு கூட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, "உங்கள் பணம் - உங்கள் உரிமை" (Your Money, Your Rights) என்ற தலைப்பில் பொதுமக்களுக்கு சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் மாவட்டம் முழுவதும் உள்ள வங்கி கிளைகள் வாயிலாக நடத்திட திட்டமிடப்பட்டு, வருகின்ற டிசம்பர் 31 ஆம் தேதி வரை அந்தந்த வங்கி கிளைகளில் நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வங்கியாளர்களுக்கு அறிவுறுத்த ப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் சுமார் ரூ.40 கோடி மதிப்பீட்டிலான உரிமை கோரப் படாத வைப்பு தொகைகள் வங்கிகளில் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் தங்களது உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து, "உங்கள் பணம் - உங்கள் உரிமை" (Your Money, Your Rights) என்ற அடிப்படையில் உரிமை கோரி பெறலாம்.

மேலும், வாடிக்கையாளர்களின் கணக்கு விவரங்கள் சரிபார்க்கும் முறை, பழைய சேமிப்பு கணக்குகள் மீட்டெடுக்கும் வழிமுறைகள் உள்ளிட்டவைகள் குறித்து, வங்கி அதிகாரிகளின் சார்பில் இக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. மேலும், உரிமை கோரப்படாத தொகைகளை தீர்க்க வங்கி கள் சிறப்பு கவனம் செலுத்திட அறிவுறுத்தப் பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் www.udgam.rbi.org.in/unclaimed-deposits/#/login <http://www.udgam.rbi.org.in/unclaimed-deposits/> என்ற இணையதளத்தின் வாயிலாக விபரங்களை அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டம் மற்றும் முகாமின் தொடக்க விழாவின் போது, மாவட்ட நிர்வாகத்தால் திட்ட வைப்புத்தொகை உரிமை கோரப்பட்ட திட்ட தொகையினை, ஐஓபி திருப்பாச்சேத்தி வங்கிமேலாளர் மூலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மண்டல அதிகாரி மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆகியோர் இனைந்து,

ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட ரூபாய் 6.48 லட்சத்திற்கான உரிமை கோரப்படாத திட்டத் தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

மேலும், இந்நிகழ்வின் போது உங்கள் பணம் - உங்கள் உரிமை" (Your Money, Your Rights) தொடர்பான விழிப்புணர்வு கையேடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி துணை மண்டல மேலாளர் லட்சுமிராஜ், ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் திரு.அன்பரசு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.பிரவீன் குமார், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.அனிஷ் குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் திரு.இராஜேந்திர பிரசாத், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு.ஐ.சையது முகைதீன் இப்ராகிம் உள்ளிட்ட அனைத்து வங்கி அதிகாரிகள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# எம்விஆர் சினிமால் புதிய திரையரங்கம் திறப்பு விழா அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்

கூடுவாஞ்சேரி, அக்.31-

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அடுத்த வள்ளாஞ்சேரி ஜிஎஸ்டி சாலை ஓரத்தில் புதியதாக மிகப் பிரம்மாண்டமான எம்விஆர் சினிமால் புதிய திரையரங்கம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு எம்விஆர் புதிய திரையரங்கத்தினை ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் முன்னதாக தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜிஜேந்திரன் இராமு அனைவரையும் வரவேற்றனர். இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் தாம்பரம் எஸ்.ஆர். ராஜா, செங்கல்பட்டு வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய செயலாளர் ஆப்பூர் சந்தானம், நகர மன்ற தலைவர்கள், மறைமலைநகர் ஜெ.சண்முகம், கூடுவாஞ்சேரி எம்கேடி. கார்த்திக் தண்டபாணி, துணைத் தலைவர்கள் கூடுவாஞ் சேரி வழக்கறிஞர் ஜிகே. லோகநாதன், ஊரப்பாக்கம் ரேகா கார்த்திக், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



■ கன்னியாகுமரி மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குருந்தன்கோடு பகுதியில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.



■ தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் சட்டீஸ்கர் மாநிலத்தில் 3.11.2025 அன்று நடைபெறவுள்ள மாநிலங்களுக்கு இடையேயான கால்பந்துப் போட்டியில் பங்குபெறும் சப் ஜூனியர் 14 வயதுக்குட்பட்டோர் தமிழ்நாடு அணி மாணவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.



# மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையேயான வினாடி வினா போட்டியினை தொடங்கி வைத்தார்

கடலூர், அக்.31-

கடலூர், கிருஷ்ணசாமி பள்ளியில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையேயான வினாடி வினா போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., இன்று (30.10.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

பள்ளி மாணவ, மாணவிகளிடையே பாடத்திட்டங்கள் மட்டுமன்றி பொதுஅறிவு சிந்தனைகளை வளர்த்திடும் வகையில் வினாடிவினா போட்டி நடைபெறுகிறது. தற்போது இணையதளம் வாயிலாக உடனடியாகவும், எளிதாகவும் மாணவர்கள் தங்களுக்கு தேவையான பல்வேறு தகவல்களை பெற முடிகிறது. இருப்பினும் வினாடிவினா போன்ற நேரடி போட்டிகள் நடத்துவதன் மூலம் மாணவர்களின் அறிவாற்றலை சோதித்திடவும், அவர்களின் தனித்திறன்களை வெளிகொணரவும் வாய்ப்பாக அமையும். மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் நடைபெறும் இப்போட்டியினை தொடங்கி வைத்து பரிசு வழங்கியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தற்போது பள்ளி அளவில் மட்டுமே போட்டிகள் நடைபெறுகிறது. இதனை கல்லூரி அளவில் நடத்தி மாணவர்களின் பொதுஅறிவு சார்ந்த சிந்தனைகளை மேம்படுத்திட வேண்டும். இன்றைய தினம் பள்ளி அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறுபவர்கள் மாநில அளவிலான இறுதிகட்ட போட்டிகள் நடத்தப்பெற்று வெற்றி பெறும் மாணவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அழைத்து செல்லப்படவுள்ளனர்.

எனவே இதுபோன்ற வாய்ப்புகளை மாணவர்கள் திறம்பட பயன்படுத்தி கொண்டு, தங்களது தனித்திறமைகளை வெளிகொணர்ந்து சாதனையாளர்களாக உருவாக வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி தினமலர் பதிப்பாளர் ஆர்.வெங்கட்ராமன், மாவட்ட கல்வி அலுவலர் இஸ்மாயில், பள்ளி முதல்வர் ஆயிஷா நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்திற்கு வருகை புரிந்ததையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் 118வது பிறந்த நாளையொட்டி மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாண்புமிகு சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.





## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் சிறப்பு வார்டு சபா கூட்டம்

கோவை, அக்.31-

மாநகராட்சி மத்திய மண்டலம் 80வது வார்டில் தர்மராஜா கோவில் வீதியில் உள்ள மாநகராட்சி சமுதாய கூடத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் சிறப்பு வார்டு சபா கூட்டம்

பொது சுகாதார குழு தலைவர், பெ.மாரிசெல்வன் தலைமையில் நடைபெற்றது.

இச்சபா கூட்டம், பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையே நேரடித் தொடர்பை ஏற்படுத்தி, வார்டின் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்த உதவியது.

80வது வார்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், குடிநீர் விநியோகம், சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து மாமன்ற உறுப்பினர் முன்னிலையில் வார்டு சபா கூட்டத்தில் மனுக்களை பொது மக்கள் வழங்கினார்கள்.

பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட குறைகளை உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள்.

இந்நிகழ்வில் உதவி பொறியாளர் நாகேந்திரன் சுகாதார ஆய்வாளர் தனபால், பகுதி பொறுப்பாளர் என்.ஜே.முருகேசன், வார்டு செயலாளர் நா.தங்கவேலன், அரசு அலுவலகங்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள், பொது மக்கள், மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் இந்த சிறப்பு வார்டு சபா கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்று (30.10.2025) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்திற்கு வருகை புரிந்ததையொட்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## நீதிமன்றத்தை அரசியல் மேடையாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது: சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை, அக்.31-

நீதிமன்றத்தை அரசியல் மேடையாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது என, மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்த வழக்கில், சென்னை உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இந்திய தண்டனைச் சட்டம், குற்ற விசாரணை முறைச் சட்டம், இந்திய சாட்சிகள் சட்டத்துக்கு மாற்றாக, பாரதிய நியாய சன்ஹிதா, பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா மற்றும் பாரதிய சாக்ஷ்ய அதினியம் என்ற பெயர்களும் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, 2024 ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளன.

இந்த சட்டங்களை அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது என அறிவித்து, அவற்றை ரத்து செய்யக் கோரி திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உள்ளிட்டோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள், தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தன.

அப்போது மனுதாரர்கள் தரப்பில், மூன்று சட்டங்களை நிறைவேற்றும் போது உரிய நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை. நாடாளுமன்றத்தில் போதுமான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இல்லாத நிலையில், அவசர கதியில் இந்த சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என வாதிடப்பட்டது.

இதைக் கேட்ட தலைமை நீதிபதி, முறையான கலந்தாலோசனை நடத் தவில்லை; தங்கள் கருத்துகள் பரிசீலிக்கப் படவில்லை; போதுமான எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இல்லை என்ற காரணங்களை கூறி, எப்படி இந்த சட்டங்களை எதிர்த்து வழக்கு தொடர முடியும் என கேள்வி எழுப்பினார். இந்த காரணங்களை கூறி சட்டம் இயற்றும் தகுதியை எதிர்க்க முடியாது எனத் தெரிவித்த நீதிபதிகள், இதுசம்பந்தமான தீர்ப்புகள் ஏதும் இருந்தால் தாக்கல் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இந்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்படும் எனத் தெரிவித்தனர்.

அப்போது, திமுக தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், சட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து இடையீட்டு மனு தாக்கல் செய்ய உள்ளதாகவும் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், வேண்டுமானால் தனி மனுவாக தாக்கல் செய்யலாம். இந்த வழக்கில் இடையீட்டு மனுவை ஏற்க முடியாது எனத் தெரிவித்தனர்.

மேலும், இந்த நீதிமன்றத்தை அரசியல் மேடையாக்க அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த நீதிபதிகள், வழக்குகளின் விசாரணையை நவம்பர் 3 வது வாரத்துக்கு தள்ளிவைத்தனர்.

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழா 2025 2026 போட்டிகளில், வெற்றி பெற்ற 1,065 மாணாக்கர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

சிவகங்கை, அக்.31-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலைத்திருவிழா 2025-2026 போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று (29.10.2025) சிவகங்கை மருதுபாண்டியர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள் (மானாமதுரை), திரு.எஸ்.மாங்குடி அவர்கள் (காரைக்குடி) ஆகியோர் முன்னிலையில், வழங்கி தொடங்கி வைத்து தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற கடந்த நான்கரை ஆண்டுகளில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் தமிழகத்தில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, இந்திய துணை கண்டத்திலேயே தலைசிறந்த முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக, அனைத்து துறைகளும் சீரான வளர்ச்சி பெற்றிடும் வகையில், சிறப்பான நிர்வாகம் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது.

அதில், பள்ளிக் கல்வித்துறையில் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு, எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு கல்வி வளர்ச்சியில் முன்னேறிய மாநிலமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது.

குறிப்பாக, மாணாக்கர்கள் கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டு, கலை, பண்பாடு மற்றும் கலாசாரம் ஆகியவைகளிலும் சிறந்து விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையிலும், மாணாக்கர்களிடையே ஆர்வத்தினை தூண்டும் வகையிலும் சிறப்பான நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொரோனா காலகட்டத்திற்கு பிறகு மாணவச் செல்வங்களின் மனச்சோர்வினை போக்கின்ற வகையில், கலைத்திருவிழாவானது ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மாணாக்கர்களின் தனித்திறன்களை அறிந்து அதனை வெளிக்கொணருகின்ற வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் தமிழகம் முழுவதும் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் கல்வி திருவிழாக்கள் கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, 202526 ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழாப் போட்டிகள் அரசு பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும், அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்குத் தனியாகவும், 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்கள் பங்குபெறும் வகையில் அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளைச் சார்ந்தோ ர்களுக்கான கலைத்திருவிழாவாக மாவட்ட அளவில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இக்கலைத்திருவிழாவில், கவின்கலை/நுண்கலை, இசை (வாய்ப்பாட்டு), கருவி இசை தோல் கருவி, கருவி இசை துளை ஞ் காற்றுக் கருவிகள், கருவி இசை ஞ்



தந்திக் கருவிகள், நடனம், நாடகம் ஆகிய 7 வகையான போட்டிகள் 5 பிரிவுகளின் கீழ் என மொத்தம் 100 போட்டிகள் ''பசுமையும் பாரம்பரியமும்'' என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடைபெற்றது.

மேலும், சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவியர்கள் (CWSN) பெரும்பான்மையான அளவில் இக்கலைத்திருவிழாப் போட்டிகளில் பங்குபெறுவதை உறுதிசெய்யும் வண்ணம் மொத்தமாக உள்ள 21 வகையான குறைபாடுகளுள், ID, ASD, சிறி எனும் சிலவகை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் கடந்த ஆண்டினைப் போலவே 15 போட்டிகள் தனியாக நடைபெற்றுள்ளது.

கடந்த 4.8.2025 முதல் 18.8.2025 வரை முதற்கட்டமாக பள்ளி அளவில் நடைபெற்ற போட்டிகளில் 1,32,979 மாணாக்கர்கள் பங்கேற்று, அதில் 60,464 மாணாக்கர்கள் வெற்றி பெற்றனர். பள்ளி அளவில் வெற்றி பெற்றவர்களுக்கென ஒன்றிய அளவில் கடந்த 13.10.2025 முதல் 17.10.2025 வரை நடைபெற்ற போட்டிகளில் 17,237 மாணாக்கர்கள் பங்கேற்று, அதில் 6,565 மாணாக்கர்கள் வெற்றி பெற்றனர்.

அதனைத்தொடர்ந்து, ஒன்றிய அளவில் வெற்றி பெற்றவர்களுக்கென கடந்த 23.10.2025 அன்று தொடங்கப்பட்டு, இன்றையதினம் வரை நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் 3,072 மாணாக்கர்கள் பங்கேற்றதில், 1,065 மாணாக்கர்கள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை பெற்று வெற்றி பெற்றுள்ளனர். இப்போட்டிகளில் முதலிடம் பெற்ற சில கலைப்பிரிவுகளைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி தொடங்கி வைக்கப்படுகிறது.

இம்மாவட்ட அளவிலான போட்டிகளில், முதலிடம் பெற்றுள்ள 375க்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் வருகின்ற 24.11.2025 முதல் 28.11.2025 வரை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெறுவதற்கான வாய்ப்புக்களை பெறவுள்ளனர்.

மேலும், மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில் தங்களின் திறமையை நிரூபித்து, அதிக அளவிலான போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு அரசின் சார்பில் கலையரசன் மற்றும் கலையரசி பட்டமும் வழங்கப்படவுள்ளது.

அவ்வாறாக நடைபெற்ற மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகளில், கடந்த 2022-2023 ஆம் கல்வியாண்டில் 31 மாணாக்கர்களும், 2023 -2024 ஆம் கல்வியாண்டில் 20 மாணாக்கர்களும், 2024 -2025ஆம் கல்வியாண்டில் 36 மாணாக்கர்களும் மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

குறிப்பாக, சிவகங்கை மாவடத்தில் முதன்முறையாக கடந்தாண்டு நடைபெற்ற கலைத்திருவிழா போட்டியில் செவ்வியல் இசை மற்றும் நாட்டுப்புறப்பாடல் ஆகிய இரண்டு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்ற கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி மு.லேனா அவர்களுக்கு கலையரசி பட்டம் பெற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். அவ்வாறு, கடந்தாண்டு பெற்றுள்ள கலையரசி பட்டத்தினை இந்தாண்டும் தக்கவைத்துக் கொண்டு, கலையரசன் பட்டத்தினையும் வெல்வதற்கு மாணாக்கர்கள் தங்களது முழு பங்களிப்பை அளித்து சிவகங்கை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும்.

கடந்தாண்டில் மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் பரிசுகள் மட்டுமன்றி, எனது சார்பிலும் பரிசுத்தொகை வழங்கப்பட்டது. அதேபோன்று, இந்தாண்டும் மாநில அளவில் குழு போட்டிகளில் வெற்றி பெறும் நமது மாவட்டத்தைச் சார்ந்த மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 50,000/,

இரண்டாம் பரிசாக ரூபாய் 30,000/, மூன்றாம் பரிசாக ரூபாய் 20,000/ மற்றும் தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறும் மாணாக்கர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 30,000/, இரண்டாம் பரிசாக ரூபாய் 20,000/, மூன்றாம் பரிசாக ரூபாய் 15,000/ எனது சார்பில் வழங்கப்படும் என்பதை இந்நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணாக்கர்கள் தங்களது ஆர்வத்தின் அடிப்படையிலான போட்டிகளில் சிறந்து விளங்கி, மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் மட்டுமன்றி தேசிய அளவிலும் தங்களது பங்களிப்பை ஏற்படுத்தி, முயற்சி திருவினையாக்கும் என்ற அடிப்படையில் அதில் சாதிக்க முயற்சித்திடல் வேண்டும். தங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்திட அரசு தங்களுக்கு துணையாக நிற்கும். எனவே, மாணாக்கர்கள் அனைத்திலும் சிறந்து விளங்கி தங்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) திரு.சே.மாரிமுத்து, சிவகங்கை நகர்மன்ற தலைவர் திரு.சி.எம்.துரைஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் திரு.சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்ற துணைத்தலைவர் திரு.கார்கண்ணன், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.த.இராஜேந்திரன் (தொடக்கநிலை), திரு.ப. வடிவேல் (தனியார் பள்ளிகள்), திரு.சீ.க.செந்தில்குமார் (தொடக்கக்கல்வி), ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி உதவி திட்ட அலுவலர் திரு.ஏ.பீட்டர் லெமாயூ, மாவட்ட கல்வி அலுவலர்கள், பள்ளிக் கல்வித்துறையை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## வேலூர் தலைமை அஞ்சல் அலுவலகம் சார்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பேரணி

வேலூர், அக்.31-

வேலூர் மாவட்டம், அண்ணா சாலை, தலைமை அஞ்சல் அலுவ லக விழிப்புணர்வு நிகழ்ச்சி, இந்திய அஞ்சல் துறை தேசிய கண்காணிப்பு விழிப்புணர்வு வாரமாக 27.10.2025 முதல் 02.11.2025 வரை கடைபிடிக்கிறது. இதனையொட்டி வேலூர் அஞ்சல் கோட்ட கண்கா ணிப்பு கண்காணிப்பாளர் அலுவலகம் சார்பாக பொதுமக்கள் விழிப்புணர்வு உணர்வை ஊக்குவிக்கும் விதமாக நடைபயண பேரணி 30.10.2025 அன்று காலை 09:00 மணி அளவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடைபயண விழிப்புணர்வு பேரணியானது வேலூர் தலைமை அஞ்சலகத்தில் ஆரம்பித்து வேலூர் வடக்கு காவல் நிலையம் திருப்பத்தில் திரும்பி, தொடர்ந்து வெங்கடேச பெருமாள் கோவில் திருப்பத்தில் திரும்பி, இறுதியாக வேலூர் தலைமை அஞ்சலத்தை வரை சுமார் 2 கி.மீ விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வேலூர் கோட்ட இந்த நடைபயண விழிப்புணர்வு பேரணியில், அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் என். ராஜகோபாலன், முதுநிலை அஞ்சல் அலுவலர் என். முரளி, வேலூர் தலைமை அஞ் சலகம், கே. சுவாமி நாதன், வேலூர் உதவி கண்காணிப்பாளர் (தலைமையிடம்), என். சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர் மற்றும் எஸ்.சுந்தர்ராஜன், மக்கள் தொடர்பு அதிகாரி வேலூர் கோட்டம் மற்றும் சுமார் 80க்கும் மேற்பட்ட அஞ்சல் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி சிறப்பித்தனர்.





## தாராபுரத்தில் அதிமுக உரிமை மீட்பு குழுவினர் முன்னாள் கல்வி அமைச்சர் செங்கோட்டையனுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்

திருப்பூர், அக்.31-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே, பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 118ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, நாளை (வியாழக்கிழமை) இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் அரசு விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள அதிமுக உறுப்பி னரும், கோபிசெட்டி பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செங்கோட்டையன், இன்று கோபிசெட்டிபாளையத் திலிருந்து ராமநாதபுரம் நோக்கி புறப்பட்டார். அவர் தாராபுரம் வந்தவுடன், திருப்பூர் மாநகர் மாவட்டச் செயலாளர் சண்முகம் மற்றும் புறநகர் மாவட்ட செயலாளர் டி.டி.கே. காமராஜ் ஆகியோர் தலைமையில்,

300க்கும் மேற்பட்ட அதிமுக உரிமை மீட்பு குழுவினர் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

செங்கோட்டையனை வரவேற்க, தொண்டர்கள் அனைவரும் அதிமுக கொடியை கையில் ஏந்தியவாறு, பட்டாசு வெடித்து, இனிப்புகள் வழங்கி, பூங்கொத்து கொடுத்து, சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து, பழனி சாலையில் இரண்டாவது வரவேற்பும் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது செங்கோட்டையன், தனியார் உணவகத்தில் தேநீர் அருந்துவதற்காக தங்கியிருந்தபோது, அங்கிருந்த கடை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் அவருடன் செல்பி மற்றும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

பின்னர், அங்கு கூடியிருந்த செய்தியாளர்கள், தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த செங்கோட்டையன், "செய்தியாளர்களுக்கு எனது வணக்கம். நான் தற்போது பேட்டி அளிக்க விரும்பவில்லை. எனது கடமை பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் திருவருட்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திச் செல்வதே," என கூறினார்.

பின்னர் அவர், தனது குழுவினருடன் வாகனங்களில் ராமநாதபுரம் நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

தாராபுரத்தில் நடந்த இவ்வரவேற்பு நிகழ்வில், அதிமுக தொண்டர்கள் முழக்கம் எழுப்பி, தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு உற்சாக சூழலை ஏற்படுத்தினர்.



## திருப்பரங்குன்றம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி குறித்து பண்ணை பள்ளி

மதுரை, அக்.31-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-26 ஆம் ஆண்டு திருப்பரங்குன்றம் புதுக்குளம் பிட் 1 கிராமத்தில் B.15 Farm School - Good Agricultural Practices ICM IN PADDY நெல் பயிரில் நல்ல வேளாண் நடைமுறைகள் குறித்த பண்ணை பள்ளி மதுரை மாவட்டம் வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் விதை நேர்த்தி முறைகள், நெல் பயிர்களுக்கான உரப்பரிந்துறை உயிர் உர பயன்பாடு வேளாண்மை துறை மானிய திட்டங்கள்,பயிர்களுக்கு ஊட்டச்சத்து மேலாண்மை அவசியம், விதை நேர்த்தி குறித்து, செயல் விளக்கம்,நெல் நாற்றங்கால் முறை விதை நேர்த்தி முறை பசுந்தாள் மற்றும் பசுந்தலைகள் பயன்படுத்தும் முறைகள் மண்புழு உர பயன்பாடு ரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்களை பயன்படுத்தும் முறைகள் கோணவிடர் பயன்படுத்தும் முறை செயல் விளக்கங்கள், மானிய திட்டங்கள், நுண்ணீர் பாசன திட்டங்கள் குறித்தும் பயிற்சி மற்றும்விளக்கம் அளித்தனர் இந்நிகழ்வில் மத்திய திட்ட இயக்குனர் இராணி,வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம்,வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜயபாரதி,வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் ஞான அருள் சாமுவேல் ராஜா,துணை வேளாண்மை அலுவலர் பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர், விவசாயிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அனைவரையும் வரவேற்று வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா முடிவுரையாற்றினார் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவிய தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் ,மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

## 2100 கிலோ ரேசன் அரிசி பறிமுதல்

சிவகங்கை, அக்.31-

சிவகங்கை மாவட்ட குடிமை பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறை சார்பு ஆய்வாளர் அன்புதாசன் மற்றும் போலீசார் ரேசன் அரிசி கடத்தல் சம்மந்தமாக இளையான்குடி பகுதியில் நேற்று ரோந்து செய்து வந்த போது மறவமங்கலம் சூராணம் ரோட்டில் சந்தேகபடும் படியாக வந்த TN64L7606 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் 42 வெள்ளை சாக்கு பைகளில் சுமார் 2100 கிலோ ரேசன் அரிசி இருப்பது கண்டுபிடிக்க பட்டது. பின்பு மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த மதுரை காமராஜபுரத்தை சேர்ந்த பெருமாள் மகன் பாலாஜி மற்றும் முனியாண்டி மகன் வேலு ஆகியோரை கைது செய்து வழக்குபதிவு செய்தனர். கைப்பற்றிய 2100 கிலோ ரேசன் அரிசியை த.நா.நு.பொ.வா.கழக குடவுனில் ஒப்படைத்தனர்.



## ஜோலார்பேட்டையில் ஏலகிரி அருகே, கூட்டமைப்பு பத்திரிக்கையாளர்களின் கலந்தாய்வு கூட்டம்

திருப்பத்தூர், அக்.31-

திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை தாலுகா, ஏலகிரி அருகே, ஜோலார்பேட்டையில் கூட்டமைப்பு பத்திரிக்கை யாளர்களின் கலந்தாய்வு கூட்டம் புதன்கிழமை பகல் தென் னிலை கதிர் புலனாய்வு இதழ் (மாதமிருமுறை) ஆசிரியர் சென்னை வி.எம். தமிழன் வடிவேல் தலைமையிலும், மூத்த மாவட்டச் செய்தியாளர் ஆனந்த் முன்னிலையிலும் நடைபெற்றது.

வேலூர் ஒருங்கிணைந்த மாவட்ட மூத்த பத்திரிக்கையாளர் வேலூர் வாரியார், சமூக ஆர்வலரும், செய்தி உதவி ஆசிரியரும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின், ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவருமான டாக்டர். ராஜ்பாபு, திருப்பத்தூர் மாவட்ட தலைமை செய்தியாளர்கள், மாவட்ட செய்தியாளர்கள், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, ஆம்பூர், ஆலங்காயம், நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் மற்றும் ஏலகிரி உள்ளிட்ட மாவட்ட மற்றும் தாலுகா செய்தியாளர்கள் என பலர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் பருவ மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் வளர்ச்சிக்காகவும், உண்மை செய்திகளை வெளியிட்டு மக்களுக்காக செயல்பட்டு வரும், பத்திரிகையாளர்கள் நலிவடைந்த பத்திரிக்கையாளர்களின் நலன் கருதி பல்வேறு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு பத்திரிகையாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் சலுகைகளை இதுவரை பெறாமல் உள்ளவர்கள் தினமும் முழு நேரமாக பணியாற்றி, அரசு சலுகைகளை பெறாமல் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கு, சலுகைகளை பெறுவதற்கு உண்டான செயல்பாடு நெறிமுறைகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. அரசு செய்திகளை சேகரித்து அச்சிட்டு செய்தித்தாள்களை வழங்கும் செய்தியாளர்களுக்கு அரசு செய்தித் துறை விதிமுறைப்படி, அரசு சலுகைகளை வழங்க மாவட்ட ஆட்சியரிடமும், மாவட்ட அளவிலான அதிகாரிகள் பி.ஆர்.ஓ., ஏ.பி. ஆர்.ஓ மற்றும் சென்னை தலைமை செய்தி துறை அமைச்சர், தலைமை இடத்து செய்தித்துறை இயக்குனர்கள் மற்றும் அதிகாரிகளிடம் உங்கள் கோரிக்கையை சமர்ப்பித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## பெரும்பாக்கம் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் எம்.எல்.ஏ., அரவிந்த் ரமேஷ் பங்கேற்று ஆய்வு

சோழிங்கநல்லூர், அக்.31-

தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ,எஸ்.அரவிந்த ரமேஷ் பெரும்பாக்கம் ஊராட்சியில் (அக்டோபர் : 29) உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று ஆய்வு மேற்கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளும் ,உதவியும் செய்து கொடுத்தார். இதில் அனைத்து துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு முகாம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர் ,சங்கீதா பாரதி ராஜன், ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி .வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ,ஜே. இ. பாண்டியன், பெரும்பாக்கம் கிளைக் கழக செயலாளர்., குமார், ஊராட்சி செயலர், நாராயணன் உள்ளிட்ட அனைவரும் உடன் இருந்தனர்.



## ஆசிய இளையோர் கபடி போட்டியில் இந்தியாவிற்கு தங்கம் பதக்கம் வென்ற கண்ணகி நகர் கார்த்திகாவுக்கு பாராட்டு விழா

சோழிங்கநல்லூர், அக்.31-

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியைச் சார்ந்த கண்ணகி நகர் அரசு பள்ளி மாணவி பஹ்ரைன் நாட்டில் நடைபெற்ற இந்திய மகளிர் கபடி அணியில் சர்வதேச கபடிப் போட்டியில் (ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள்) இந்திய அணிக்காக விளையாடி தங்கப் பதக்கம் வென்ற ஆர். கார்த்திகா பாராட்டு விழா ( 27 அக்டோபர்) மாலை 6 மணிக்கு நடைபெற்றது. தமிழ்நாட்டுக்கே பெருமை எனப் பாராட்டி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ் துறை அமைச்சர்., மா. சுப்பிரமணியன் தலைமையில் சோழிங் கநல்லூர் எம்.எல்.ஏ., அரவிந்த் ரமேஷ் நிகழ்ச்சி ஏற்பா ட்டில் வெள்ளி செங்கோலை வழங்கி பாராட்டுகளை தெரி வித்தனர். உடன் 15 வது மண்டல குழு தலைவர்., மதியழகன்,1 4 வது மண்டல குழு தலைவர் .,ரவிச்சந்திரன் 195 வது மாமன்ற உறுப்பினர், ஏகாம்பரம் ,ஒன்றியச் செயலாளர் ., கோவிலம் பாக்கம், ஜி.வெங்கடேசன் உள்ளிட்ட அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் , மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றியம் , கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



■ மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், புதுத்தாமரைப்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்படக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161